
ஆக்டோபஸ்

எவேலின் ஷா

படங்கள் : ரால்ப்ஹ் கார்பென்டியர்

தமிழில்: பிரியதரிசினி இலங்கைவேந்தன்






ஆக்டோபஸ்

எவேலின் ஷா

படங்கள்: ரால்ப்ஹ் கார்பென்டியர்








ஆக்டோபஸ்







ஒற்றைக் கண் ஒன்று
கடலுக்கடியே
பாறை இடுக்கின்
வழியே வெளியே
பார்க்கிறது.

அந்தக் கண் நீந்தும்
சின்னஞ்சிறு மீன்களை
நோட்டமிடுகிறது.

அந்த கண் ஒரு
ஆக்டொபஸினுடையது.

ஆக்டோபஸின் உடல் குண்டாக,
உருண்டையாக ஒரு பலூனை
போல் தோற்றமளிக்கிறது.

அவளுக்கு எட்டு நீண்ட கரங்கள்
இருக்கின்றன.

அவை அவளின் உடலை சுற்றிக்
கொண்டிருக்கின்றன.

ஆக்டோபஸ் உணவு
தேடுவதற்காக வீட்டை விட்டு
செல்ல ஆயத்தமாகிறாள்.





அப்பொழுது அங்கே ஒரு மோதல்.

ஒரு சிறு படகு பாறைகளில்
முட்டுகிறது.

அந்த படகு சற்று பின் நகர்ந்து,
நிலைப்படுத்தி முன் நகர்கிறது.


பாறைகள் கடலின் அடிப்புறத்தை
நோக்கி கீழே விழுகின்றன.

சிறு மீன்கள் வேகமாய் நீரில்
நீந்திப் பரவுகின்றன.

நண்டு ஒன்று கட கடவென
குறுமணலின் உள்ளே வளையிட்டு
செல்கின்றது.







ஆக்டோபஸ் பயத்தினால்
வெளிரிப் போகிறாள்.

பயத்தில் மூச்சை இழுத்து
விடுகிறாள்.

அவள் உடல் சுருங்கி,

பின் பெரிதாகிறது,

மீண்டும் சிறிதாகிறது.

திடீரென அவள் வீட்டின்

முன்னே ஒரு பாறை

விழுகிறது.


ஆக்டோபஸ் உள்ளே
சிக்கிக்கொள்கிறாள்.


அவள் பாறையை அகற்ற
முயல்கிறாள். ஆனால் அது
மிகவும் கனமாக இருக்கிறது.

அவள் ஒரு கரத்தின் நுனியால்
ஒரு வழியைக் கண்டறிகிறாள்.

அவள் உடலை சிறிதாகவும்
தட்டையாகவும்
மாற்றிக்கொள்கிறாள்.

ஆக்டோபஸ்க்கு எலும்புகள்
இல்லாததால் இது எளிதானது.





அவள் பிதுங்கியது போல் வெளியே
வந்த பிறகு
அவள் உடல் மீண்டும்
உருண்டையாக மாறுகிறது.
ஆக்டொபஸ் தனது எட்டு
கரங்களில் எழுந்து நின்று நடந்து
செல்கிறாள்.





இந்த தருணத்தில் மற்றொரு பாறை
கீழே விழுகிறது.
ஆக்டோபஸ்ஸினால் அவள்
வீட்டிற்க்கு மீண்டும் திரும்பவே
முடியாது.

ஆக்டொபஸ் ஆபத்தில் உள்ளது.
அவளுக்கு ஒரு புதிய வீடு
வேண்டும்.
அவளுக்கு மறைந்து வாழ, உண்டு
இளைப்பாற, ஒரு இடம் வேண்டும்.
அதற்கான தேடலை
தொடங்குகிறாள்.
ஆக்டோபஸ் சில பாறைகளின்
மேல் நழுவிச் செல்கிறாள்.
ஒரு பாறையிடுக்கை
கண்டறிகிறாள்.
தனது ஒரு கரத்தின் நுனியை
அந்த பாறையிடுக்கில் நுழைத்து
யாருமற்று இருக்கிறதா எனப்
பார்க்கிறாள்.
ஆனால் அது ஒரு சிறிய மீனின்
வீடு.



அந்த மீன் வெளிய
நீந்தி வந்து
அக்டோபஸை
கடிக்கிறது.




ஆக்டோபஸ் முன்னேறிச்
செல்கிறாள்.
அவள் கண்டறிந்த அடுத்த
துளை
வேறு ஒரு
ஆக்டொபஸுக்கு
சொந்தமானது.




தனது வீட்டை காக்க அவன்
வெளியே வருகிறான்.


இரண்டு ஆக்டோபஸும்
சண்டையிட தொடங்கின.



ஆக்டோபஸ் இரண்டும் தனது
கரங்களால் இறுக்கி
முறுக்குகின்றன.
தங்கள் உடலை
வெள்ளையிலிருந்து கருத்து
மீண்டும் வெளுக்கின்றன.
பாறைகளின் மேல் வழுக்கி
உருள்கின்றன.
இறுதியில் அவள் கை நழுவ
விடுகிறாள்,
அவன் மீண்டும் தன்
வீட்டுக்குள் நுழைந்து
கொள்கிறான்.



அவளுக்கு காயமேதுமில்லை,
ஆனால், வாழ்வதற்கு ஒரு
இடம் கிடைக்கவில்லை.



ஆக்டோபஸ் தன் எட்டு கரங்களால்
நகர்ந்து

கடற்பாசி படுக்கையை நோக்கி
நடக்கிறாள்.


அங்கேயே ஓய்வெடுக்க நிற்கிறாள்.


அவள் உடல் அரக்கு நிறமாக மாறுகிறது.


அவளின் தோல் தடித்து கரடு
முரடாகிறது.

இதனால் மற்ற உயிரினங்களுக்கு
அவளைக் காண இயலாது.

அவள் கடல் பாசி போன்றே இருக்கிறாள்.







கடலில் பல தாவரங்கள் இருந்தாலும் அவற்றைப் போல இந்த ஆக்டோபஸ்ஸால் உருமாற இயலாது.

அவளின் தோலில் சில நிறங்கள் மட்டுமே உள்ளன.

அவளால் ஆரஞ்சு சிவப்பு, அரக்கு என நிறம் மாறலாம்.

அவள் கருத்தோ வெளுத்தோ போகலாம்.

சிறிது நேரம் கழித்து ஆக்டோபஸ் கடற்பாசி படுக்கையை விட்டு வெளியேறுகிறாள்.

தனது கரங்களில் உள்ள உறிஞ்சிகளால் அனைத்தையும் தொட்டுச் செல்கிறாள்.

அவளுடைய உறிஞ்சிகளை கொண்டு அவளால் உணரவும் சுவைக்கவும் இயலும்.

ஆக்டோபஸ் ஒரு சிறிய சிப்பியை கண்டறிகிறாள்.

அவள் தன் வலுவான அலகால் அதைக் கடிக்கிறாள்.

அவள் கடித்தபின் சிப்பியினுள் இருந்த உயிரினத்தால் நகர இயலவில்லை.





அவள் அந்த உயிரினத்தை உண்ணத் தொடங்கினாள்.

ஆனால் ஆக்டோபஸ் அங்கு பாதுகாப்பாக இல்லை.

ஒரு விலாங்கு மீன் பறையிடுக்கின் வழியே எட்டிப் பார்க்கிறது.

அது ஆக்டோபஸ்ஸை மோப்பமிட்டு அதை நோக்கி நீந்தி வருகிறது.



அதற்கு அவளை உண்ண வேண்டும்.

திடீரென ஆக்டோபஸ் விலாங்கு மீனை கவனிக்கிறது.





அவள் உணவைக் கைவிடுகிறாள்.

அவள் உடல் கருத்துப் போனது.


தன் உடலிலிருந்து ஒரு
மேகத்தைப்போல் கருப்பு மையை
பீச்சியடிக்கிகிறாள்.

அந்த மை தண்ணீரை
இருட்டாக்குகிறது.

விலாங்கு மீன் அந்த மையினில்
நீந்தி செல்கிறது.

அதற்கு அவளைக் காண
இயலவில்லை.

ஆக்டோபஸ் தப்பித்து செல்கிறது.



அவள் உடலில் இருந்து தண்ணீரை
அதிவேகமாக வெளியேற்றுகிறாள்.

அவள் கடலில் வேகமாக நீந்தி
முன்னேறிச்செல்கிறாள்.

அவள் பாதுகாப்பானதும் தன் வேகத்தை குறைத்துக் கொள்கிறாள்.

ஒரு பாராச்சூட் போல் தனது கரங்களை அவள் விரிக்கிறாள்.

சில பாறைகள் மேல் அவள் நழுவிச் செல்கிறாள்.






அங்கே பாறைகளின் நடுவே ஒரு இடுக்கை கண்டறிந்தாள்.

அந்த பறையிடுக்கை தனது மூன்று கரங்களால் சோதிக்கிறாள்.

அது வெற்றிடமாக இருந்தது.



அவள் அந்த பாறையிடுக்கில் செல்கிறாள்.

எல்லா இடத்தையும் தொட்டுப் பார்க்கிறாள்.

அந்த இடம் சரியான அளவு.

அவள் தனது புது வீட்டை கண்டுபிடித்துவிட்டாள்.

ஆக்டோபஸ் அங்கு இளைப்பாறிய வண்ணம்

கடலை நோக்கி இருந்தாள்.




நண்டு ஒன்று பாறையை நோக்கி
நடந்து வருகிறது.

அது பக்கவாட்டில் நடந்து வருகிறது.

ஆக்டோபஸ் அந்த நண்டை
நோட்டமிடுகிறாள்.





நண்டு ஒரு செத்த மீனை
கண்டறிந்து அதை
உண்ணத்தொடங்குகிறது.

ஆக்டொபஸ் அவள் வீட்டை விட்டு
வெளியே வருகிறாள்.



அவள் நண்டை நோக்கி
பாய்கிறாள்.

அவள் உடல் கறுத்து
தோற்றமளிக்கிறது.


அவள் கரங்கள் திறந்த குடை
போல் விரிகிறது.

அவள் கரங்களில் உள்ள
உறிஞ்சிகள் அந்த நண்டை
இறுக்கமாக
பிடித்துக்கொண்டன.

அவள் நண்டை கடிக்கிறாள்.

நண்டினல் நகர
இயலவில்லை.


ஆக்டோபஸ் நண்டை அவள்
வீட்டினுள்ளே
இழுத்துச்செல்கிறாள்.



அவள் நண்டின் ஓட்டை
தனது அலகால்
உடைக்கிறாள்.

பின் உள்ளிருக்கும்
இறைச்சியை உறிஞ்சி
எடுக்கிறாள்.

அவள் உண்டு
முடித்தபின், ஓட்டின்
துகள்களை வெளியே
தள்ளி விடுகிறாள்.



இவள் பல மாதங்களுக்கு முன்னர் ஒரு

ஆண் ஆக்டோபஸுடன் இனம் சேர்ந்தாள்.

இப்பொழுது வசந்த காலம்.



ஆக்டோபஸுக்கு முட்டையிடும் நேரம் நெருங்கி வருகிறது.

அவள் ஆயத்தமாக தொடங்குகிறாள்.

ஆக்டோபஸ் தனது இருக்கரங்களை வீட்டின் வெளியே கொண்டு செல்கிறாள்.

அவள் சில சிறிய கற்களை கண்டெடுக்கிறாள்.

ஆக்டோபஸ் அந்த கற்களை தனது உறிஞ்சிகளால் பிடித்துக்கொண்டிருக்கிறாள்.

அந்த கற்களை அவள் வீட்டிற்குள் கொண்டு வருகிறாள்.

அவள் அதை நுழைவாயிலில் பொறுத்திவைக்கிறாள்.

ஒரு சிறிய துளையை உருவாக்குகிறாள்.

இனி பெரிய விலங்குகளால் உள்ளே வர இயலாது.

பின் அவள் முட்டையிடுகிறாள்.

அவள் நூற்றுக்கணக்கான முட்டைகளை


நீண்ட மெல்லிய முட்டையோட்டில் இடுகிறாள்.

அவள் அந்த முட்டையோடுகளை

தனது வீட்டினுள் பாறைகள் மேல் இடுகிறாள்.

அவள் இதற்கு மேல் உணவை தேடி வெளியே செல்லமாட்டாள்.







அவள் தனது முட்டைகளை
பாதுகாக்கிறாள்.

அவற்றை சிறு மீன்களும்
இறால்களும்

உண்ணாமல் தடுத்து
பாதுகாக்கிறாள்.

தனது கரங்களால் தேய்த்து
முட்டைகளை

சுத்தமாக வைத்திருக்கிறாள்.

பல வாரங்கள் வீட்டை விட்டு
வெளியே

செல்லாமல் இருக்கிறாள்.



ஒரு வழியாக முட்டைகள் பொறிந்தன.

ஆக்டோபஸுக்கு நூற்றுக்கணக்கான குஞ்சுகள்.

அந்த அனைத்து குஞ்சுகள் மேலும் சிவப்பும் மஞ்சளுமாக புள்ளிகள் இருக்கிறது.

அவைகள் அனைத்தும் சிறிய கோமாளிகள் போல் தோற்றமளிக்கின்றன.



அவை அளவில் உண்ணியை விட ஒன்றும் பெரிதாக இல்லை.

அவைகளுக்கு நீண்ட கரங்கள் இல்லை.

அவைகளால் நன்றாக நீந்த முடியாது.

ஆனால் அவைகளுக்கு
வீட்டை விட்டு செல்லும்
தருணம் இது.

தாய் அங்கேயே
தங்கிவிடுகிறாள்.

ஏதும் உண்ணாதிருந்ததால்
அவள் மெலிந்திருக்கிறாள்.

அதிக நேரம் அவள் உயிரோடு
இருக்கமாட்டாள்.

குஞ்சுகள் அனைத்தும் கடலில்
முன்னேறி செல்லும்.

அவை இரண்டு மாதங்களுக்கு
மிதந்து கொண்டிருக்கும்.







அந்த சிறு
ஆக்டோபஸுகள் கடலில்
மிகச்சிறிய
உயிரினங்களை
உண்ணும்.


அதில் சில
ஆக்டோபஸ்கள்
மீன்களுக்கு இரையாகும்.

மீதம் இருப்பவை வளர்ந்து
பெரிதாகும்.

அவைகளின் கரங்கள்
நீண்டு வளரும்.

அந்தக் கரங்களால்
நழுவியோ நடந்தோ
செல்லமுடியும்.

நன்றாக நீந்த முடியும்.



இளம் ஆக்டோபஸ்கள்
நண்டுகளை தேடி உண்ண
ஆயத்தமாகிறார்கள்.

தனது கரங்களில் உள்ள
உறிஞ்சிகளினால் உணரவும்
சுவைக்கவும் முடியும்.

பாறைகள் மற்றும்
கடற்பாசியின் நிறத்தில் மாறி
அவைகளால்
மறைத்துக்கொள்ள முடியும்.

கருத்த மேகத்தை போல்
மையை பிச்சி அடித்து
எதிரிகளிடமிருந்து தப்பித்து
செல்ல முடியும்.







தனக்கான வீட்டை தேட தயாராக இருக்கின்றனர்.

இரண்டு இளம் ஆக்டோபஸுகள் சில பாறைகளை நோக்கி வருகின்றன.

அவை அந்த பாறைகள் மேல தனது கரங்களை நகர்த்துகின்றனர்.

ஒவ்வொன்றும் தனக்கென ஒரு பாறையிடுக்கை கண்டுபிடிக்கின்றனர்.



ஒவ்வொன்றுக்கும் தனக்கென மறைந்து வாழ, உண்டு இளைப்பாற, ஒரு பாறையிடுக்கு கிடைத்துவிட்டது.

கடலில் அவைகளுக்கென ஒரு வீட்டை கண்டடைந்தனர்.

ஆசிரியர் பற்றிய குறிப்பு

முனைவர். எவெலின் ஷா நியுயார்க் நகரத்திலுள்ள, அமெரிக்க இயற்கை அருங்காட்சியகத்தில், விலங்கியல்புத்துறை காப்பாளர், முனைவர் ஷா, பதினாறு ஆண்டுகள் மீன்களின் நடத்தைகள் பற்றி ஆராய்ச்சியில் இருந்தார். முனைவர் கரீபியன் மற்றும் மத்திய தரைக் கடலில் பல வகையான் ஆக்டோபஸ்களை கண்காணித்திருக்கிறார்.

முற்றும்